24 மணி நேரத்தில் அவற்றைப் பறிமுதல் செய்தும், சம்பந்தப் பட்டவர்களைக் கைது செய்தும் வழக்குகள் தொடரப்பட்டு வரு கின்றன. நான்கு தினங்களுக்கு முன்னால் கூட வட சென்னை யில், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொகுதியி லிருந்து 7 மூட்டை அரிசி, ரிக்ஷாவில் கடத்தப்படுகிறது என்ற செய்தி வந்தவுடன், அங்கு உடனடியாகச் சென்று அதைப் பறி முதல் செய்து அதைக் கொண்டு சென்ற ஊழியரைக் கைதுசெய்து நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

புதிய நியாய விலைக்கடைகள் திறக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம்.

*1349. திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் உள்ள பகுதியில் புதிய நியாய விலைக் கடைகள் திறப்பதற்கான அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இல்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்கும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர் களே,

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் குடும்ப கார்டுகள் உள்ள பகுதிகளை இரண் டாகப் பிரிப்பதற்கு வழியில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் ஆயிரம் குடும்பக் கார்டுகள் உள்ள கடைகள், பல்வேறு கிராமப் பகுதிகளை அடக்கியிருக்கின்ற காரணத்தால், ஒரு கடையைச் சேர்ந்த கிராமங்கள் 4 அல்லது 5 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற காரணத்தால், அந்தக் கடைகளுக்குக் குறைந்த அளவுக்குக் கார்டு கள் இருந்தாலும் மக்களுடைய வசதியை உத்தேசித்து தனி கடை களாகவோ அல்லது இருக்கின்ற ஊழியர்களைச் சில நாட்களுக்கு ஒரு கிராமப் பகுதிக்கும் இன்னொரு நாட்களுக்கு இன்னொரு பகுதிக்கும் பணிக்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்வதற்கு அரசு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர் களே, 1978ஆம் ஆண்டு வருவாய் கிராமத்திற்கு ஒரு நியாயவிலைக் கடை என்ற முறையில், கிராமப் பகுதிகளில் இன்றைய தினம் 17,382 கடைகள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல 3 கி. மீட்டர் அல்லது 5 கி. மீட்டர்

இடைவெளி இருக்குமானால் கார்டுகளின் எண்ணிக்கையைப் பொறுத்து அல்ல—இருக்கின்ற எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு புதிய கடைகளைத் தொடங்குவதற்கு அரசாங்கம் பல நடவடிக்கைகளை இதுவரையில் எடுத்து வந்திருக்கிறது. இருக்கின்ற பிரச்சினை என்ன என்பதைச் சொல்கிறேன். இப்போது 21,134 கடைகள் இயங்கிக் கொண்டு வருகின்றன. புதிய கடை ஒன்றைத் தொடங்குவது என்று சொன்னால் அரசாங்கம் 4,200 ரூபாய் மானியம் கொடுக்க வேண்டி இருக்கிறது. எனவே தான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இப்படிப் பல முறையீடுகள் வந்த காரணத்தால் 19-10-1989 அன்று, எங்கெல்லாம் பகுதி நேரக் கடைகள் வேண்டும் என்று கோரிக்கைகள் வருகின்றனவோ அந்தக் கிராமங்களில் இடத்தை மட்டும் வாடகை இல்லாமல் இலவசமாகக் கொடுப்பார்களேயானால் அந்த இடங்களில் பகுதி நேரக் கடைகளைத் திறக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றன.

9-55 மணி

ருரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாவட்டங்களைப் போல் சென்னையிலும் பெரும்பாலான இடங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரேஷன் கார்டுகளை வைத்து பொருட்களை வினியோகம் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அது மாற்றியமைக்கப்படுமா? அதே நேரத்தில் 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் தூரம் தள்ளிப் போய் ரேஷன் பொருட்களை வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு—புதிய ரேஷன் கடைகளை ஆங்காங்கு அமைப்பதற்கான விண்ணப்பங்கள் ஏராளமாக வந்திருக்கின்றன. அமைச்சர் அவர்கள் முறைப்படி ஆவன செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஆயிரம் கார்டுகளுக்கு மேலே இருக்கக்கூடிய கடைகள் இப்போது தமிழ்நாட்டில் 2,855 கடைகள் இருக்கின்றன. அங்கெல்லாம் அதிகமான மக்கள் உணவுப் பொருட்களை வாங்குகிற போது மிகுந்த அல்லல்படுகிறார்கள். அதைப் பிரிக்க வேண்டுமென்று அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. ஜனவரி மாதத்திற்குப் பிறகு ஆயிரம் கார்டுகளுக்கு மேலே இருக்கக்கூடிய கடைகள் இரண்டாகப் பிரிக்கப்படும். அது மட்டுமல்ல. ஓடைகள், மலைகள் போன்ற பகுதிகளிலே இருக்கின்ற மக்களுக்கு வசதியாகக் கடைகள் அமைத்துத் தரவேண்டும் என்ற அடிப்படையில் 100 கார்டுகள் இருந்தால் கூட அவர்களுக்காக ஒரு கடை திறக்கப்பட்டு இருக்கிறது. அப்படி 100 கார்டுகளுக்குக் கீழே உள்ள கடைகள் மொத்தம் 780. 100 கார்டுகளிலிருந்து 200 கார்டுகள் வரையுள்ள கடைகள் 2,287. 201 கார்டுகளுக்கும், 300 கார்டுகளுக்கும் இடையே உள்ள கடைகள் 2,480. இப்படி 100 கார்டுகளுக்குக் கீழே இருந்தாலும் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆயிரம் கார்டுகளுக்கு மேலே இருக்கின்ற கடைகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றை இரண்டாகப் பிரிக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேரக் கடைகளைத் திறப்பதற்கு அரசு முன் வரும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பகுதி நேரக் கடைகளைத் திறப்பதைப் பொறுத்தவரையில் அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற துணைப்பதிவாளர்களுக்கே அதிகாரம் தந்தால் காலதாமதம் தவிர்க்கப்படும். எனவே துணைப் பதிவாளருக்கு அது குறித்து அதிகாரம் அளிக்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்போது அரசு எடுத்திருக்கிற முடிவு அரசாங்கத்திற்குச் செலவு இல்லாமல் இலவசமாகக் கட்டிடங்கள் கொடுத்தால் அந்த இடங்களில் பகுதி நேரக் கடைகளுக்கு அனுமதிக்கப்படும் என்பது தான். அவ்வாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது. காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும்.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிப் பணியாளர் கூட்டுறவு சங்க முறைகேடுகள்.

*3360 **திரு. உ. ரா. வரதராசன் :** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களின் கூட்டுறவு நாணய சங்கத்தின் வைப்பு மற்றும் ஊழியர்களுக்கு கடன் வழங்குவதில் ரூ. 5.41 இலட்சம் முறைகேடுகள் நடந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே,

(அ) ஆம். தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கிப் பணியாளர் கூட்டுறவு சங்கத்தில் ரூ. 3.48 இலட்சம் மட்டும் கையாடல் நடைபெற்றுள்ளது. இந்த கையாடல் 1980-81 முதல் 1984-85-ம் ஆண்டு வரை நடந்துள்ளது.

(ஆ) கையாடலில் சம்பந்தப்பட்டவர்கள் மீது காவல் துறையில் புகார் செய்யப்பட்டு புலன் விசாரணைக்குப் பின் சென்னை ஜார்ஜ் டவுன் குற்றவியல் நீதி மன்றத்தில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு தற்போது விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது. கையாடல் செய்யப்பட்ட தொகையை வசூலிக்க தண்டத் தீர்வை நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.